Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 152 / 2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ருக்மணி | Calling: | கூலி |
| Father's / Husband's Name: | கோவிந்தராஜ் | Religion: | |
| Village: | கோடியூர் | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.07.2025

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இறந்து விட்டார்.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

நான் கோடியூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனது தம்பி மகன். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான தேவேந்திரன் மகன் ராகுலை தெரியும். அவர் எனது அண்ணன் மகன். சுமார் 3 அல்லது 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 07.00 மணிக்கு கோடியூரில் எங்கள் வீட்டின் அருகில் எனது மகன் ஈஸ்வரனை எதிரிகள் ஏதோ பேசியதற்கு கல்லை எடுத்து எனது மகனை இடது பக்க நெற்றி மற்றும் இடது பக்க மார்பு அருகே அடித்து விட்டனர். காயம்பட்ட எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். எனது மகன் மனநிலை சரியில்லாதவன். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவரும் இருந்தார். போலிசார் வந்தார்கள். நடந்ததை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான், **புகார் வாக்குமூலம் அசாஆ1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர். எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் தற்போது அவர்களுடன் சமாதானமாக செல்கிறேன்.

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில்லை. அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ருக்மணி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 152 / 2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | நடராஜன் | Calling: | விவசாயம் |
| Father's / Husband's Name: | வரதராஜ் | Religion: | |
| Village: | கொத்தகோட்டை | Age: | 52 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.07.2025

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இறந்து விட்டார்.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

நான் கொத்தகோட்டை கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான தேவேந்திரன் மகன் ராகுலை தெரியும். அ.சா.1ஐ தெரியும். அ.சா.1ன் மகன் ஈஸ்வரன் தெரியும். அவருக்கு சம்பவத்தின்போது மனநிலை சரியில்லாமல் இருந்தார். சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஈஸ்வரனை ஊரிலுள்ள யாரோ பசங்கள் அடித்தார்கள் என்று போலிசார் ஊருக்கு வந்து விசாரணை செய்தார்கள். அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான், **பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள்**

**முறையே அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில்லை. அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) நடராஜன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K